Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**C.C No.338/2022**

Depositions of - சக்தி வேல் ..witness for ...Prosecution Side Witness 1 (LW- 1 )

| | | |
|---|---|---|
| Name | - | சக்தி வேல்(PW- 1) |
| Father's and Husband's name | - | பாலசுப்பிரமணியம் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.11.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் மணியம்பட்டியில் குடியிருந்து, எனது வீட்டிற்கு முன்பு பலசரக்கு கடை வைத்துள்ளேன்.கடந்த 18.10.2019ம் தேதி எனது கணவர் போடிக்கு சென்று சாமான்களை வாங்கிக்கொண்டு வரும் போது மணி 2.45 இருக்கும், அவரது இரு சக்கர வாகனத்தில் வந்தார். சில்லமரத்துப்பட்டிக்கும், சிலமலைக்கும் இடையே உள்ள சக்தி சோதிட நிலையம் அருகே வந்தபோது தேவாரத்தில் இருந்து வந்த நான்கு சக்கர வாகனமானது எனது கணவர் வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. சம்பவ இடத்தில் இருந்தவர்கள் எனக்கு போன் செய்து எனது கணவருக்கு விபத்து நடந்தது தொடர்பாக தகவலை சொன்னார்கள். பின்னர் தகவலை கேட்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். அங்கு எனது கணவருக்கு இடது பக்க வயிற்றில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது கணவர் இறந்த நிலையில் இருந்தார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். போடியில் காவல்நிலையம்

சென்று புகார் கொடுத்தேன். நான் காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து மேற்படி அங்கிருந்த போலிசார் ஒருவர் நான் சொன்ன சங்கதிகளை எழுதிக்கொடுத்தார். நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் அதசாஆ.1 .** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இறந்தது எனது கணவர் என்றால் சரிதான். ரவி, கர்ணன் ஆகியோர் எனது ஊரை சேர்ந்த எனது உறவினர்கள் என்றால் சரிதான். முத்தையா எனது மகன். சுருளிசாமி, மகாராஜா ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். எனது கணவர் சாலை விபத்தில் இறந்த தகவலை எனக்கு யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது என்றால் 2.45 மணிக்கு . நான் விபத்து நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 3 மணிக்கு சென்றேன். நான் விபத்து நடந்த இடத்திற்கு போன பின்னர் ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்றால் சுமார் 3.30 மணி இருக்கும். நான் சம்பவ இடத்தில் இருக்கும் போது காவல்நிலையத்தில் இருந்து ஆட்கள் வந்தார்களா என்றால் நான்அழுது கொண்டு இருந்ததாலும், பதட்டத்தில் இருந்ததாலும் கூட்டமாக இருந்ததாலும் பார்க்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு வந்தபோது விபத்து நடந்த சுற்றிலும் இருந்த ஆட்கள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு நான் , எனது மகன், சுருளி மற்றும் சாட்சிப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள எனது உறவினர்கள் சென்றோம். புகாரில் உள்ள விவரங்களை என்னிடம் யார் கூறினார்கள் என்றால் 5 வருடம் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. எனக்கு படிக்கத்தெரியாது என்றால் 6 ம் வகுப்புதான் படித்துள்ளேன். எனக்கு படிக்கத்தெரியும். புகாரில் உள்ள விவரங்கள் கூட்டெழுத்தில் உள்ளதால் எனக்கு தெரியாது. புகாரை எழுதிக்கொடுத்தது போலிசா, அல்லது காவல்நிலையத்தில் உள்ள தனிநபரா என்றால் போலிசார் தான் எழுதினார். விபத்து குறித்து

கேள்விப்பட்டு மேற்படி சாட்சிகள் அனைவரும் எங்கள் ஊரிலிருந்துமொத்தமாக வந்தோமா அல்லது தனித்தனியாக வந்தோமா என்றால் அவர்அவர்கள் தகவல் கிடைத்து அவர்அவர்கள் வந்தார்கள். காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் என்னுடன் வந்த உறவினர்கள் யாரும் சாட்சி கையெழுத்து செய்தார்களா என்றால் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருந்தவர்கள் போட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்தவுடன் நேராக காவல்நிலையத்திற்கு சென்றோமா அல்லது மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் ஆம்புலன்ஸ் வந்தவுடன் என் கணவரின் பிரேதத்தை ஏற்றிவிட்டு மருத்துவமனைக்கு சென்ற பின்னர்தான் காவல்நிலையம் சென்றோம். விபத்து நடந்த இடத்தில் இருந்து நான் எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் சுமார் 3.30 மணிக்கு , கால் மணி நேரத்தில் சென்றிருப்போம். நான் கொடுத்த புகாரில் எனது கணவர் போடியிலிருந்து சாமான்களை வாங்கிக்கொண்டு வரும்போதுதான் விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சாமான் வாங்க செல்லும் போது எனது கணவருடன் யார் யார் உடன் சென்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு ஒட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி லைசென்ஸை போலிசாரிடம் கொடுத்து விட்டேனா என்றால் கொடுத்துவிட்டேன். எனது கணவர் மது அருந்துவாரா என்றால் காட்டு வேலை செய்வதால் சாப்பிடுவார். நான் சொல்வது போல் எனது கணவர் போடியிலிருந்து எந்தவொரு சாமான்களும் வாங்கி வரவில்லை என்றும், சிலமலையில் மது வாங்கிக் கொண்டு வந்து மது அருந்தவேண்டும் என்ற அவசரத்துடன் ரோட்டில் வாகனம் வருவதை கவனிக்காமல் திடிரென்று மெயின்ரோட்டில் குறுக்கே வந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரிடையாக பார்க்காததாலும், இறந்து போனவர் எனது கணவர் என்பதாலும், போலிசார் போட்ட பொய் வழக்கில் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தான் சம்பவ இடத்தில் உள்ள சாட்சிகளை கொடுக்காமல் உறவினர்களை மட்டும் இந்த சம்பவத்தில் சாட்சியாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் எதிரி வாகனத்தை முறையாக ஓட்டி வந்தார் என்றும், இந்த வழக்கு எனது கணவரின் அவசர தன்மையால் தான் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.11.09 15:34:47 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**C.C No.338/2022**

Depositions of - ரவி ..witness for ...Prosecution Side Witness 2 (LW- 2 )

| | | |
|---|---|---|
| Name | - | ரவி (PW- 2) |
| Father's and Husband's name | - | கருப்பசாமி |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.11.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் மணியம்பட்டியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 18.10.2019 ம் தேதி மதியம் 2.15 மணி இருக்கும். நானும் , கர்ணனனும் எனது இருசக்கர வாகனத்தில் மணியம்பட்டியில் இருந்து போடிக்கு வந்து கொண்டிருந்தோம். சில்லமரத்துப்பட்டிக்கும் சிலமலைக்கும் இடையில் சக்தி சோதிட நிலையம் அருகே சாலை விபத்து நடந்திருந்தது. அடிப்பட்ட நபர்கள் யாரென்று பார்க்க சென்றபோது, ஆஜர் எதிரி பிக்கப் வண்டியில் வந்து , இருசக்கர வாகனத்தில் வந்த பாலசுப்பிரமணியம் என்பவர் வண்டியின் மீது மோதி விபத்து நடந்திருந்தது. வண்டியில் இருந்த கண்ணாடி உடைந்து பாலசுப்பிரமணியனுடைய வயிற்றில் குத்தியிருந்தது. பாலசுப்பிரமணியன் வீட்டிற்கு போன் மூலமாக தகவல் சொன்னோம். பாலசுப்பிரமணியனுடைய மனைவி வந்து புகார் கொடுத்தார். சிலமலையிலிருந்து சில்லமரத்துப்பட்டிக்கு சென்று கொண்டிருந்த பாலசுப்பிரமணியன் மீது

வேகமாக சென்று கொண்டிருந்த ஆஜர் எதிரி ஓட்டி வந்த பிக்கப் வேன் மோதி விபத்து ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு போலிசார் எத்தனை மணிக்கு வந்தனர் என்றால் நான் போன கால் மணி போலிசார் நேரத்தில் வந்தார்கள். நான் இறந்த நபரின் உறவினர் என்றால் இல்லை, அடுத்த தெரு. ஒரே சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்தபோது, எதிரி சில்லமரத்துப்பட்டியிலிருந்து சிலமலைக்கு வந்ததாக கூறியுள்ளேன் , மேற்படி விவரத்தை போலிசாரிடம் கூறினேனா என்றால் கூறியுள்ளேன். பிக்கப் வண்டியும், பாலசுப்பிரமணியனுடைய வண்டியும் நேருக்கு நேராக மோதிக் கொண்டது என்றால் சரிதான். எந்த வண்டியின் கண்ணாடி பாலசுப்பிரமணியத்தின் வயிற்றில் குத்தியது என்றால் பிக்கப் வண்டியின் கண்ணாடி குத்தியது. நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை, அரசு மருத்துவமனைக்கு சென்றேன். இந்த வழக்கு தொடர்பாக என்னை போலிசார் எங்கு வைத்து, எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் பாலசுப்பிரமணியம் இறந்து இரண்டு, மூன்று மாதத்தில் விசாரித்தார்கள். நான் பிக்கப் வாகனத்திற்கு எவ்வளவு தூரம் தள்ளி சென்று கொண்டிருந்தேன் என்றால் சுமார் 50 அடி தள்ளி சென்று கொண்டிருந்தேன். எங்கிருந்து நாங்கள் பிக்கப் வாகனத்தை தொடர்ந்து வந்தோம் என்றால் சிலமலையில் இருந்து தொடர்ந்து வந்தோம். நாங்கள் ரேடார் வாகனத்தில் சென்றிருந்தோம். நாங்கள் வாகனத்திற்கு பின்னால் வந்ததால் , முன்னால் சென்ற வாகனம் எப்படி மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்குசெல்லும் போது சுற்றிலும் ஆட்கள் வந்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும், இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த வழக்கின் வாகன விபத்தானது இறந்த

பாலசுப்பிரமணியத்தின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் எனக்கு விபத்து பற்றி நேரடிடையாக தெரியாது.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL Digitally signed by G K VELUMAYIL Date: 2023.11.09 15:34:54 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

**C.C No.338/2022**

Depositions of - கா்ணன் ..witness for ...Prosecution Side Witness 3 (LW- 3)

| | | |
|---|---|---|
| Name | - | கா்ணன் (PW- 3) |
| Father's and Husband's name | - | சுப்பிரமணியன் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.11.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் மணியம்பட்டியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 18.10.2019 ம் தேதி மதியம் 2.30, 2.45 மணிக்கு இருக்கும். நானும் , எனது சகலை ரவியும் இருசக்கர வாகனத்தில் சிலமலையிலிருந்து போடிக்கு சென்றோம். ரவிக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றோம். மேற்படி இருசக்கர வாகனத்தை ரவி என்பவர் ஓட்டிச்சென்றார். சில்லமரத்துப்பட்டிக்கும் சிலமலைக்கும் இடையே சக்தி சோதிட நிலையம் அருகே சென்று கொண்டிருந்தபோது பிக்கப் வாகனம் முந்தி சென்றது. பிக்கப் வாகனமானது வேகமாக சென்றது. எதிர் திசையில் பாலசுப்பிரமணியம் அவரது இருசக்கர வாகனத்தில் வந்தார். பிக்கப் வாகனமானது அவரது இருசக்கர வாகனத்தில் மோதியது. இருசக்கர வாகனத்தில் இருந்த

பாலசுப்பிரமணியன் கீழே விழுந்து கிடந்தார். பிக்கப் வாகனத்தின் கண்ணாடி உடைந்து பாலசுப்பிரமணியத்தின் வயிற்றில் குத்தியிருந்தது. சம்பவ இடத்திலேயே பாலசுப்பிரமணியம் இறந்து விட்டார். அதன்பிறகு பாலசுப்பிரமணியத்தின் வீட்டிற்கு தகவல் கொடுத்தோம். மேற்படி பிக்கப் வண்டியை ஓட்டி வந்தது ஆஜர் எதிரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்திலேயே விசாரித்தார்கள். எத்தனை மணி இருக்கும் என்றால் 2.45 இருக்கும், அப்போதே போலிசார் வந்து விட்டார்களாஎ ன்றால் அரைமணி நேரம் இருக்கும். அரைமணி நேரம் என்றால் 3.15 என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்றால் 1 மணிநேரம் கழித்து வந்தது. தனியார் ஆம்புலன்ஸ் தான் வந்தது. காவல்நிலையத்திற்கு புகார்தாரர் புகார் கொடுக்க சென்றபோது நான் உடன்சென்றேனா என்றால் இறந்தவர் எனது அண்ணன் என்பதால் நான் காவல்நிலையததிற்கு செல்லவில்லை மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்த பின்னர் என் அண்ணி புகார் கொடுத்த பின்பு , வேறு எப்போதாவது விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறியிருப்பது போல் என் அண்ணன் போடியிலிருந்து மணியம்பட்டி நோக்கி வந்திருந்தால் அவர் எனக்கு வலது புறம் சென்றிருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது அண்ணன் போடியிலிருந்து எங்களுக்கு எதிர் திசையில் வந்திருந்தால் நான் சொல்வது போல் விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். இந்த விபத்து நடந்த பின் தான் நான் யார் என்றுசென்று பார்த்தேன் என்றால் சரிதான். எவ்வளவு துாரத்தில் விபத்து நடந்ததுள

ன்றால் 200 அடி . நான் பிக்கப் வாகனத்திற்கு பின்னால் சென்றேன் என்பதால் விபத்து எப்படி நடந்தது என்று நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் பிக்கப் வாகனம் இருசக்கர வாகனத்தை மோதியது. நான் சொல்வது போல் விபத்து நடந்திருந்தால் என் அண்ணன் பாதையை மாற்றி வலது பக்கம் வந்திருக்கவேண்டும் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது அண்ணன் மது வாங்கிக்கொண்டு சிலமலை ஊருக்குள் வராமல் வேறு வழியாக வந்து சக்தி சோதிட நிலையத்திற்கு அருகே உள்ள சாலையை குறுக்கே வந்ததால் விபத்து நடந்தது என்றால் எங்கள் பரம்பரைக்கு மது அருந்தும் பழக்கமும், சிகரெட் குடிக்கும் பழக்கமும் கிடையாது. இந்த வாகன விபத்தானது முழுக்க முழுக்க என் அண்ணனின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் விபத்து நடந்த இடத்தில் அருகே உள்ள நபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் விபத்து நடக்கும் என்று யாரும் எதிர்பார்த்து நின்றிருக்க மாட்டார்கள். நாங்கள் தான் விபத்து நடந்தவுடன் சென்றோம். வெளியூரில் உள்ளவர்கள் அடையாளம் தெரியாத என்றால் சாட்சியம அளிக்க வரமாட்டார்கள். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.11.09 15:35:02 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**C.C No.338/2022**

Depositions of முத்தையா ..witness for ...Prosecution Side Witness 4 (LW- 4 )

| | | |
|---|---|---|
| Name | - | முத்தையா (PW- 4) |
| Father's and Husband's name | - | பாலசுப்பிரமணியம் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.11.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் மணியம்பட்டியில் குடியிருந்து, கடை வைத்துள்ளோம். விபத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியம் எனது அப்பா . அசா.1 எனது அம்மா. கடந்த 18.10.2019 ம் தேதி நானும், எனது அம்மாவும் வீட்டில் இருந்தோம். மதியம் 3.00 மணி இருக்கும் . எனது அப்பாவின் பெயர் அலைபேசியில் இருந்து எனக்கு போன் வந்தது. செல்போனில் பேசிய நபர் எனது அப்பாவிற்கு, சில்லமரத்துப்பட்டிக்கும், சிலமலைக்கும் இடையே விபத்து ஏற்பட்டதாக கூறினார். நான் விபத்து நடந்த இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் உடனே சென்றேன். எனது அப்பாவிற்கு வயிற்றில் காயம் ஏற்பட்டிருந்தது.

எனது அப்பாவின் உடம்பில் இருந்து அதிகமாக இரத்த போக்கு ஏற்பட்டிருந்தது. எனது அப்பாவை ஆம்புலன்ஸில் ஏற்றி போடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது அப்பா வடக்கிலிருந்து தெற்குநோக்கி மண் ரோட்டில் இருசக்கர வாகனத்தில் வந்து சிலமலை ரோட்டில் திரும்பும் போது விபத்து நடந்ததாக கூறினார். மேற்படி விபத்தை ஏற்படுத்தியது ஹரிகிருஷ்ணன் என்றும் அவர் பிக்கப் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியாக பக்கத்தில் உள்ளவர்கள் கூறினார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவ இடத்திற்கு போன பின்னர் எனது அம்மா, உறவினர்கள் எப்போது வந்தார்கள் என்றால் 15,20 நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன், எனது அம்மா பாதி வழியிலேயே சம்பவ நடந்த இடத்தில் கூட்டமாக இருந்தது என்று வீட்டிற்கு சென்று விட்டார். ரவி , கர்ணன் , சுருளிசாமி, மகாராஜா ஆகியோர் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான், மகாராஜா மட்டும் சிலமலையை சேர்ந்தவர். என் அம்மா காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் சென்றேன். என் அம்மா கொடுத்ததாக சொல்லும் புகாரை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் இருந்த போலிசார் ஒருவர் விசாரித்து எனது அம்மா நடந்த விவரங்களை கூறியதில் எழுதிக்கொடுத்தார். நான் என் அம்மாவுடன் காவல்நிலையத்திற்கு புகார் சென்றதற்கு சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்குசென்ற பின்னர் எவ்வளவுநேரம் கழித்து காவல்துறையினர் வந்தார்கள் என்றால் நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது போலிசார் அங்கிருந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் புகார் வாக்குமூலம் எதுவும் வாங்கினார்களா என்றால் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். நான் போவதற்கு முன்னாடியே என் அப்பா இறந்து விட்டார் என்றால் நான் சென்று 30

நிமிடம் கழித்து தான் இறந்தார். நான் சென்று 30 நிமிடம் கழித்து தான் என் அப்பா இறந்தார் என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் இல்லை, நான் போன பின்னர் தான் இறந்ததாக கூறினேன். நான் இந்த வாகன விபத்தை நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வாகன விபத்தை நேரிடையாக நான் பார்க்காததாலும், இறந்த நபர் எனது தகப்பனார் என்பதாலும் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.11.09 15:35:10 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**C.C No.338/2022**

Depositions of சுருளிச்சாமி ..witness for ...Prosecution Side Witness 5 (LW- 5 )

| | | |
|---|---|---|
| Name | - | சுருளிச்சாமி (PW- 5) |
| Father's and Husband's name | - | தங்கராஜ் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.11.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் மணியம்பட்டியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். 18.10.2019 ம் தேதி சிலமரத்துப்பட்டியில் மெயின்ரோட்டில் பாலசுப்பிரமணியத்திற்கு விபத்து நடந்த இடத்தில் மதியம் 2.30 மணிக்கு மேல் 3.30 மணி இருக்கும். சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து படம் வரைந்தார். கையொப்பம் கேட்டார்கள் . கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள

முதல் கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அதசாஆ.2.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். இறந்து போன நபருக்கு நான் உறவினர் என்றால் மச்சினன், எனது அக்கா கணவர். சம்பவம் இடத்திற்கே நான் போகவில்லை என்றும், இறந்து போன நபர் என் அக்கா கணவர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.11.09 15:35:17 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.